**இணை ஆணையர் (நிர்வாகம்)(மு.கூ.பொ.) , வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. க. லஷ்மி ப்ரியா, இ.ஆ.ப.,**

**செயல்முறை ஆணை எண். ஒய்–1/6443/2019** **நாள் 31.12.2019**

பொருள்: பணிக்குழு – வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை–5 – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், வணிகவரி ஆணையர் அலுவலக அலகிற்கு இளநிலை உதவியாளர்கள் நேரடி நியமனம் – 2015–2016, 2016–2017 மற்றும் 2017-2018–ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு – பணியில் சேர்ந்தது – பணி வரன்முறை ஆணை – வழங்கப்படுகிறது.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.1326/ப்பி.எஸ்.டி.–ஜி1/2019, நாள் 16.12.2019.
2. இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஒய்–1/6443/2019, நாள் 27.02.2019.

•••

**ஆணை:**

பார்வை 1–ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு, வணிகவரி ஆணையர் அலுவலக அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்காணும் நபர்கள் பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி, அவர்கள் பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்களாகப் பணியில் சேர்ந்துள்ளனர்.

| வ.எண். | பெயர் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | து. சங்கீதா | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 2. | ச. கௌசியா ஷெகனாஸ் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 3. | இ. தணிகைவேல் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 4. | ஆ. சுரேஷ் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 5. | கி. கனகலட்சுமி | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 6. | சி. பிரபாகரன் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 7. | த. செல்வக்குமார் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 8. | ஜே. பாத்திமா | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |

2. எனவே, தனியர்களின் பணியை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்து, அந்நாள் முதல் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு, இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப் படுகிறது.

3. மேலும், தனியர்களின் பணிவரன்முறை சென்னை உயர்நீதிமன்றம்/சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள, 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ஆம் ஆண்டிற்கான தொகுதி–4ன் தெரிவு, சம்மந்தப்பட்ட நீதிப்பேராணை மனுக்களின் முடிவுக்குக் கட்டுப்பட்டது என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–க. லஷ்மி ப்ரியா,
இணை ஆணையர் (நிர்வாகம்)(மு.கூ.பொ.)

பெறுநர்

சம்பந்தப்பட்ட தனியர்கள்,
வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை
(ஒப்புதலுடன்)

நகல்

கண்காணிப்பாளர்,
'இசட்' பிரிவு மற்றும் 'ஜி' பிரிவு.

(ஆணைப்படி/அனுப்பப்படுகிறது)

கண்காணிப்பாளர்

31/12/19